**செய்தி வெளியீடு எண்.589** **நாள்.18.9.2007**

## நகராட்சி நிர்வாகத் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நேரடி நியமனங்களுக்கு 29.11.2001 முதல் ஒட்டு மொத்த தடை விதிக்கப்பட்டது. அரசு பணியின்போது இயற்கை எய்திய அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களை கருணை அடிப்படையில் நியமனம் செய்வதும் தடை செய்யப்பட்டது.

திராவிட முன்னேற்ற கழக அரசு மீண்டும் பதவியேற்ற பின்னர் அரசுப் பணியில் நேரடி நியமனத்திற்கு இருந்த தடையினை நீக்கியது. கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு இருந்த தடையும் நீக்கப்பட்டது.

நகராட்சிகளில் காலியாக இருந்து வந்த அனைத்து பணியிடங்களையும் நிரப்புவதற்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாகத் துறையில் **15** மருத்துவர் பணியிடங்கள், **48** உதவிப் பொறியாளர் பணியிடங்கள், **3** நகரமைப்பு அலுவலர் பணியிடங்கள், **113** சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான நியமன உத்தரவுகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் **14.06.2007** மற்றும் **22.06.2007** ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டன.

மேலும், இளநிலை உதவியாளர் பணியிடங்களில் **25** விழுக்காடு பணியிடங்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்ய அரசு உத்தரவிட்டதற்கிணங்க, நிலுவையில் இருந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு **78** இளநிலை உதவியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் பணியிடங்களுக்கு **09.08.2007** அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் நியமனத்திற்கான உத்திரவு சம்பந்தப்பட்ட வாரிசுதாரர்களுக்கு நேரில் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பணியிடைக் காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுகளிடமிருந்து **31.12.2006** வரையில் பெறப்பட்ட மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு இன்றைய தினம் **26** இளநிலை உதவியாளர், **55** வருவாய் உதவியாளர், **1** தட்டச்சர், **4** ஓட்டுநர், **7** பணி ஆய்வர், **8** மின் கம்பி உதவியாளர் கிரேடு **-II**, **14** பதிவறை எழுத்தர், **24** துப்புரவு பணி மேற்பார்வையாளர், **2** சங்கிலியாள், **15** அலுவலக உதவியாளர், **12** காவலர், **12** மகப்பேறு ஆயா உள்ளிட்ட **180** பணியிடங்களுக்கான பணி நியமன ஆணையினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திரு. தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்களின் பேரவைத் தலைவர் திரு.ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, நகராட்சி நிர்வாக இணை ஆணையர் திரு.வே.க சண்முகம், மற்றும் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு.வெ. பிச்சை மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

நகராட்சிகளில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களையும் அந்தந்த நகராட்சியின் நியமன குழுவின் மூலம் தொடர்ந்து பூர்த்தி செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.